01.04.2025 அ.வ. எண். 99/2022 வா.சா.1 ரோகினி

**குறுக்கு விசாரணை**

நான் வேலூரில் வசித்து வருகிறேன். கிராம சுகாதார செவிலியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 2016 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றேன். நான் மாத சம்பளமாக ரூ.45,000/- பெற்றுவந்தேன். நான் வருமான வரி செலுத்தி வந்தேன். பிரதிவாதி நான் வேலை செய்த ஊரில் தலைவராக இருந்தார், அதன்மூலம் தெரியும். சிறுங்கட்டுர் கிராமத்தில் பணிபுரிந்தேன். சிறுங்கட்டூர் கிராமத்தில் பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றேன். வா.சா.ஆ.1ல் கடன் பத்திரம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் நான் சர்வ சுதந்திரமாய் அனுபவித்து வரும் சொத்தை ஈடுகாட்டி என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் சொத்து விவரம் இல்லை. வா.சா.ஆ.1ல் பதிவுக்கு அழைத்தால் வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதியின் மகனுக்கு விபத்து ஏற்பட்டது, அப்போலோ மருத்துவமனையில் வந்து பார்க்குமாறு சொன்னார். செலவிற்காக சொத்தை கிரையம் கொடுப்பதாக சொன்னார். சொத்தை வாங்கிக்கொள்வதாக தான் நான் பணம் கொடுத்தேன். பிரதிவாதி எனக்கு கொடுப்பதாக சொன்ன சொத்தை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார். வா.சா.ஆ.1ல் கையெழுத்து மட்டும் வாங்கி வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றும் அது என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி சொத்தை விற்கவேண்டும் என்று எழுதிக்கொடுத்திருந்தால் முழுமையான சொத்து விவரங்களை குறிப்பிட்டு எழுதிக்கொடுத்திருப்பார் என்றும் வா.சா.ஆ.1 என்னால் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் ஆற்காடு தாலுக்காவில் வசிப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 யார் எழுதியது என்று குறிப்பிடவில்லை என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுதப்பட்டது. வா.சா.ஆ.1ல் முனுசாமி, குணசேகரன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். முனுசாமி அரும்பருத்தி கிராமத்தில் வசித்து வருகிறார். முனுசாமி எனக்கு உறவினர் கிடையாது, பழக்கமானவர். பிரதிவாதிக்கு எதிராக செய்யாறு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 45/2022 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 04.04.2019 ஆம் தேதி என்னிடம் ரூ.50,000/- கடன் வாங்கியதாக அ.வ.எண். 45/2022 வழக்கை தாக்கல் செய்தேன். அ.வ.எண். 45/2022 வழக்கில் தாக்கல் செய்துள்ள

கடனுறுதி சீட்டில் சாட்சிகளாக முனுசாமி, குணசேகரன் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் முனுசாமி மட்டும் தான் கையெழுத்து போட்டுள்ளார். அந்த வழக்கில் பிரதிவாதி ரூ.50,000/- கடன் வாங்கியது உண்மையென ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். கொரோனா காலத்தில் வட்டி சம்மந்தமாக எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டதால் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண். 45/2022 வழக்கில் சாட்சி கையெழுத்து செய்த முனுசாமியை சாட்சியாக விசாரணை செய்தேன். முனுசாமி சாட்சியத்தில் பிரதிவாதியை எனக்கு தெரியாது என்பதால் பிரதிவாதி முனுசாமியிடம் சென்று கேட்டதில் முனுசாமி பணம் கொடுக்கலாம் என்று சொன்னதால் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் தவறு. நான் தவறாக சொல்கிறேன் என்றும் முனுசாமி அவ்வாறு தான் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. 04.04.2019 ஆம் தேதி வழங்கிய கடனுக்கே விசாரிக்கும்போது அதற்கு முன்பு விசாரிக்காமல் 04.01.2019 ஆம் தேதி கடன் கொடுத்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் மற்றும் வட்டி 04.01.2019 ஆம் தேதி முதல் தரவேண்டும் என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையிலும், முதல் விசாரணை உறுதிக்கூற்றிலும் சொல்லியுள்ள சங்கதிகளை தான் அறிவிப்பிலும் சொல்லியுள்ளேன் என்றால் இடத்தை பதிவு செய்து கொடுப்பதாக சொன்னார். 04.01.2019 ஆம் தேதி முதல் வட்டி வேண்டுமென்று கோரியுள்ளேன். வா.சா.ஆ.2 அறிவிப்பில் 4 மாதம் வட்டி கொடுத்ததாக சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 என்னால் மோசடியாக உருவாக்கப்பட்டது என்றும் அதனால் தான் அறிவிப்பிலும், வழக்கிலும் முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றும் அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.